Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்10 வள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 07 புதன்கிழமை (23-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 271

# வடக்கில் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு வரும் ஆபத்து நிலை!

## யாழ். அரச அதிபர் ஜனாதிபதிக்கு அறிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட். 23

வடக்கிற்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருவதற்கான வழிகள் தடைப் பட்டிருப்பதை அடுத்து, வடக்கில் உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு வரும் ஆபத்து நிலையும் பட்டினி சூழ் நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. — இவ்வாறு கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அறிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பட்டினி நிலை ஏற்படக் கூடிய ஆபத்து உருவாகியிருப்பது குறித்து, கொழும்பில் தவல் சாதனங்களுக்கும் அரச அதிபர் அறிவித்திருப்பதாக அறிய வருகின்றது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்பு

(7 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருள் விவகாரத்தை ஆயுதமாக பயன்படுத்த அரசு முயற்சி!

கொழும்பு, ஓக 23

யாழ். குடாநாட்டு தமிழ் மக்களுக்கு எதிராக உணவுப் பொருள் விவகாரத்தை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த ஸ்ரீலங்கா அரசு முயல்வதாக செய்தி ஏஜென்ஸிகள் சில தெரிவித்தன.

வடக்கே உணவுப் பொருள்களை அனுப்புவதை சிக்கலாக்க அரசு முயற்சிக்கின்றது.

இதன் மூலம் குடாநாட்டுத் தமிழ் மக்களைப் பட்டினி போட்டு—

விடுதலைப் புலிகள் மீது அவர்களைக் கொண்டு அழுத்தம் பிரயோகிக்க — அரசு முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த அழுத்தத்தின் மூலம்—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் குடாநாட்டு மக்களுக்கு உணவுக் கப்பல்களை அனுப்பும் அதேசமயம், அதே கப்பல்களில் படையினருக்கும் உணவுப் பொருள்கள் ஏற்றிச் சென்று இறக்கப்படுவதற்கு புலிகளை இணங்க வைக்கலாம் என்று அரசு கருதுவதாகக் கூறப்படுகின்றது.

குடாநாட்டில் அடுத்த வாரத்துக்கு உணவும் இல்லாத நிலைமை உருவாகியுள்ளதை சுட்டிக்காட்டிய செயலக வட்டாரங்கள்—

ஒக்டோபர்மாதம் வந்துவிட்டால் அடுத்த பெப்ரவரி வரை கடல் கொந்தளிப்புக் காரணமாக வடக்கிற்கு கப்பல்களில் உணவு எடுத்துச் செல்ல முடியாத நிலை வந்துவிடும்—என்றும் தெரிவித்தன. [உ]

## வடக்கு மக்களை பட்டினிபோடும் குற்றச்சாட்டை அரசு மறுக்கின்றது!

யாழ். குடாநாட்டின் மீது விரைவில் மற்றொரு பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட இருப்பதாக அரசு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்தன.

எனினும் இந்நடவடிக்கை எப்போது எங்கு ஆரம்பிக்கப்படும் என்ற விவரம் ஏதும் வெளியிடப்படவில்லை.

இத்தாக்குதல் நடவடிக்கைக்கு முன்னர் வடபகுதி மக்களை பட்டினி போட்டு நலிவுற வைத்து உளவியல் ரீதியாக பாதிப்புறச் செய்யும் முயற்சியாகவே உணவுப் பொருள்களை வடக்கே அனுப்புவதை அரசு தடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. ஆனால் அந்தக் குற்றச்சாட்டை அரசு மறுத்துள்ளது.

மக்களைப் பட்டினி போட்டு யாழ். பிரதேசத்தைக் கைப்பற்ற முயற்சிக்கப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை அரசு நிராகரித்துள்ளதாக பி.பி.ஸி. அறிவித்தது.

## மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகள் தீர்வுத்திட்டம் குறித்து இன்று முடிவு

கொழும்பு, ஓக. 23

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசாங்கம் வெளியிட்டுள்ள தீர்வு யோசனைகள் குறித்து மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகள் இன்று முக்கிய முடிவு எடுக்கவுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை தலதா மாளிகையில் கூடிய இரு பீடாதிபதிகளும் தீர்வு யோசனை குறித்து நீண்ட நேரம் ஆராய்ந்தனர் என்றும்—

அரசியல் தீர்வுத்திட்டத்தில் பல அம்சங்கள் வரவேற்கப்பட்டாலும் நாட்டின் இறைமை, பாதுகாப்பு, சிங்கள இனத்தின் உரிமைகள் ஆகியவை பற்றிய சில பிரிவுகள் வரவேற்கக் கூடியதல்ல எனக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது என்றும் செய்திகள் வெளியாகின.

மீண்டும் இன்று கூடும் பீடாதிபதிகள் இவ் விடயம் குறித்து முடிவு செய்து இணைந்து அறிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் கையளிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3]

## அளவெட்டிப் பகுதியில் இருந்து படை முன்னேற்ற முயற்சி புலிகளால் முறியடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23

அளவெட்டியில் இருந்து மல்லாகம் பகுதியை நோக்கி முன்னேற ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று மேற்கொண்ட முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தி படையினரின் முன்னேற்ற முயற்சியை தடுத்து நிறுத்தி பழைய நிலைகளுக்கு அவர்களை பின்வாங்கச் செய்தனர். [ஒ-3]

## திங்களன்று இடம் பெற்றது "ட்ரகன் பயர்" நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 23

வலிகாமம் மேற்கில் ஸ்ரீலங்காப் படைகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைக்கு 'ட்ரகன் பயர்' (Dragon Fire) எனப் பெயரிடப்பட்டிருந்ததாக இலங்கை வானொலி அறிவித்தது.

புராணக் கதைகளில் வர்ணிக்கப்படும் ஒரு விலங்கே 'ட்ரகன்' எனப்படுகின்றது. விலங்கு, பறவை, பாம்பு, முதலை ஆகியவற்றின் தோற்றம் கலந்த உருவத்தைக் கொண்ட இந்த உயிரினம் நெருப்பை உமிழ்வதாக சீனக் கதைகளிலே சித்திரிக்கப்படுகின்றது.

''ட்ரகன்' விலங்கு வாயால் உமிழ்ந்து வீசும் நெருப்புச்

[7 ஆம் பக்கம் பார்க்க]

## தீர்வு யோசனையை ஆட்சேபித்து ஜே. வி. பியினர் நேற்று ஆர்ப்பாட்டம்

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள தீர்வு யோசனைகளை ஆட்சேபித்து நேற்று நுகேகொடையில் ஜே. வி. பியும், தேசிய மீட்பு முன்னணியும் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தின.

இந்த யோசனைகள் செயற்படுத்தப்படின், நாடு மிகப் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்து விடும் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஜே.வி.பி.யின் பிரசார செயலர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கு இடையில் நிலவும் வேறுபாடுகளை இந்த யோசனைகள் மேலும் தீவிரப் படுத்தும் எனவும் இனங்களைப் பிளவுபடுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரப் பரவலாக்கல் பிழையானது அல்ல; அதற்கு முன் நாட்டில் ஜனநாயகமும் பூரணசமவுடமையும் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய மீட்பு முன்னணி எம்.பியான நிஹால் கலப்பதியும் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் பொதுச் செயலர் ஆரிய புலேகொடவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். (ஒ-6)

## படையினர் தாக்குதலுக்கு இலக்கான ஈ.பி.டி.பியினர்!

மட்டக்களப்பு நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது ஈ.பி.டி.பி. மற்றும் தமிழ்க்கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர் தாக்கப்பட்டதாக தெரியவந்தது.

ஈ.பி.டி.பி மட்டக்களப்பு—அம்பாறைப் பொறுப்பாளரின் உதவியாளர் ஒருவரும் தாக்குதலுக்கு உள்ளானார் என ஜனாதிபதியிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மேயர் செழியன் பேரின்பநாயகத்தின் வீடு உட்பட தமிழர்களின் வீடுகள் பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதுடன் நகரில் தமிழர்கள் பலர் தாக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — சனி இரவு மட்டக்களப்பு நகரில் உள்ள முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் செல்வம் மீனவன் (16 வயது) என்பவர் காயமடைந்தார். (உ-3)

# போர்க்கால
# முதலுதவிப் பயிற்சி பற்றிய
# கலந்துரையாடல்

யாழ். மத்திய கல்லூரியில் அரச சார்பற்ற நிறுவனங்களால் 09-07-95 இல் ஆரம்பிக்கப்பட்ட போர்க்கால முதலுதவிப் பயிற்சியில் பங்குகொண்ட இணைப்பாளர்கள், பயிற்சியாளர்கள் அனைவரையும் அவசியம் சந்தித்து கலந்துரையாடவேண்டி இருப்பதால் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

இடம்: இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை
காலம்: 23 — 08 — 1995
நேரம்: பி.ப 3-30 மணி

இணைப்பாளர்,
முதலுதவிப் பயிற்சி.

C—2004

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



**செல்வன் சடாட்சரம் தனீஸ்வரன்**
**2 ஆம் லெப். சின்ன அல்பேட்**

எங்களின் மகனாய்: 23 — 03 — 1973
செங்களத்தில் மாவீரனாய்: 23 — 08 — 1990

தரணியில் தனீஸ்வரனாய் உருவெடுத்தாய்!
தரணியைக் காக்கவென்று பாசறை சென்றாய்
சின்ன அல்பேட்டாய்! களம்பல கண்டாய்;
ஊர்காவற்றுறையில் உன்னுயிர் ஈந்து!
ஆண்டு ஐந்து ஆனாலும்! ஆறிடுமோ எம்துயரம்!
மீண்டும்வரும் பிறவியிலும் உன்னோடு
உறவாட அம்பாளை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!!!

- குடும்பத்தினர்

தகவல்;
வினோ நகைப்பூங்கா,
சந்தோசம் தெரு,
கஸ்தூரியார் வீதி

[38171]

# 45-ம் நாள் நினைவு தினம்



நாட்டுப்பற்றாளா
**சோ. மிதிலகாந்தன்**
(93 ஆம் ஆண்டு பொறியியல் மாணவன்)

தோற்றம்: 27 — 04 — 1972
மறைவு: 10 — 07 — 1995

**விழிகள் நீர்வீழ்ச்சி ஆனதுவே**

எந்திரவியல் கற்று எம்முடன் இனிது பழகி
சிந்தையில் குடிபுகுந்த மிதிலைகாந்தா!
இந்திரலோகம் நீ இமைக்கும் முன் சென்றிட்டாயே
விந்தையே அல்ல எமது விழிகள் நீர்வீழ்ச்சியானதுவே

தொழில் நுட்ப கல்லூரி
3ஆம்ஆண்டு மின்சார பொறியியல் மாணவர்கள்
E. E. III-95

[38167]

## கல்விக்கழக ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஓக. 23

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கடமைபுரியும் சகல கல்விக்கழக ஆசிரியர்களும் உடுவில் கோட்டக் கல்வி அலுவலகத்தில் இன்று புதன் காலை 10 மணிக்கு தமது சுயவிவரங்களுடன் பிரதிக்கல்விப் பணிப்பாளரைச் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ஓ]

## நோபல் பரிசு பெற்ற தமிழர் காலமானார்

புதுடில்லி, ஓக. 23

வான்இயற்பியல் துறையில் பல அரிய தத்துவங்களின் கர்த்தாவும், நோபல் பரிசு பெற்ற இந்தியருமான திரு. சுப்பிரமணியம் சந்திரசேகர் நேற்று முன்தினம் சிகாகோவில் தனது 84 ஆவது வயதில் காலமானார்.

நோபல் பரிசு பெற்றவரான சேர் சி வி. ராமன் இவரது உறவினராவார். (எ)

## படையினர் சூடு; குருநகரில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 23

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று அதிகாலை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குருநகரில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

குருநகர் ஓடக்கரை வீதியில் உள்ள தமது வீட்டு வாசலில் படுத்துறங்கிக்கொண்டிருந்த ஜே. ஜெகன் (18 வயது) என்ற இளைஞரே காயமடைந்தவர் ஆவார்.

கழுத்தில் காயமடைந்த இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஓ-4)

## அருணோதயா மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஓக. 23

அருணோதயாக் கல்லூரி ஜி. சீ. ஈ. சாதாரண தர மாணவர்கள், தமக்குரிய தமிழீழ பொதுக்கல்வித் தேர்வு நுழைவு அட்டைகளை இன்று காலை 9 மணிக்கு மருதனார்மடத்தில் இயங்கும் மேற்படி கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம் என பாடசாலை அதிபர் அறிவிக்கின்றார். [எ]

## மாடு இடித்து வயோதிப மாது மரணம்

திருநெல்வேலி, ஓக. 23

திருநெல்வேலி மாரியம்மன் வீதியில் நேற்று நடந்து சென்றுகொண்டிருந்த மூதாட்டி ஒருவரை, காளை மாடு இடித்து விழுத்தி கொம்பால் குத்தியதில் அவர் மரணமானார்.

காயமடைந்து மூர்ச்சை இழந்த நிலையில் அந்த மூதாட்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்கு மரணமானார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த அப்பாக்குட்டி செல்லம்மா (82 வயது) என்பவரே மரணமானவர் ஆவார். (ஓ-4-13)

## பாணை மட்டும் உற்பத்தி செய்க!

யாழ்ப்பாணம், ஓக. 23

தற்போது ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையை கருத்தில் கொண்டு பாணை மட்டுமே உற்பத்தி செய்யுமாறு பேக்கறி உரிமையாளர்களை செயலக திட்டப்பணிப்பாளர் செ. பத்மநாதன் அறிவுறுத்தியுள்ளார்.

பேக்கறி உரிமையாளர் சங்கத்துக்கு அவர் நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில்— கேக், பணிஸ் — போன்றவற்றை உற்பத்தி செய்வதை உடனடியாக நிறுத்தி பாணை மட்டுமே உற்பத்தி செய்யுமாறு— அவர் கோரியுள்ளார். (ஓ-3)


பேரரசி வண்ணச்சோலை
[ மகாராணி ]
வழங்கும்
உற்சவகால மலிவு விற்பனை
★ சிவரஞ்சினி ஆர்ட்சில்க்
★ வோயில் சாறி வகைகள் (தரமானது)
இன்னும் பல
கையிருப்பு தீரும் முன் முந்துங்கள்
பேரரசி வண்ணச்சோலை
[ மகாராணி ]
யாழ்ப்பாணம்.
(சி-2101)


# 31-ம் நாள் நினைவஞ்சலி

**செல்வி விமலா தம்பிநாயகம்**

கள்ள மில்லா புன்சிரிப்பும்
கபட மில்லா நேர்விழியும்
வஞ்சமிலா நிறை நெஞ்சும்
வகை பாரா நட்புமென
செல்ல மொழி பேசிநிதம்
செருக்கின்றி வாழ்ந்தாயே
விமலா உன் பிரிவால்
வீடே இருண்டதம்மா!
தூரத்தே ஒரு வல்லூறு
துரத்தி வந்ததை
நாமறியோம்
தாயின் கூட்டத்தில்
நீ இருந்தால்
தப்பி இருப்பாய் எம்மகளே
தேவனின் திருவடி சேர்ந்தாயே
தெய்வத்துள் வைத்துன்னை
பார்ப்போமே!

ஆன்ம ஈடேற்றத்திற்காக பிரார்த்திக்கும்:
சகோதரிகள்.

[38166]

# ஓராண்டு நினைவலைகள்



மலர்வு: 20 - 04 - 1960
உதிர்வு: 03 - 09 - 1994

**செல்லத்துரை பத்மராணி (றஞ்சி)**

திதி: 23 - 08 - 95

அன்பு, பண்பு, பாசம் என்று
அனைவரையும் வென்றவரே
ஆருயிர்போல் எமையெல்லாம்
அன்பால் அணைத்தீரே - இன்று
சென்றுவிட்ட திசையறியோம்
தேம்புகின்றோம் இங்கு நாம் - எமக்கு
ஆறுதல் கூற இங்கு யாருமே இல்லையம்மா...
உமைப்பிரிந்தின்று ஓராண்டு ஆனதுவோ
ஓயவில்லை எம்துயரம் - ஒரு
நூறாண்டுதான் ஆயிடினும்
தீராது நம் கவலை
தென்றாய் இருந்த வீட்டில்
தீம்புயல் வீசச்செய்து ........
எங்கு நீ சென்றாயம்மா?
இதயங்கள் நொந்து - இங்கு
ஏங்கியே அழிகின்றோமே
வந்து எம் அகங்களிலே உன்
வண்ணமுகம் காட்டிடுவீர்!

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணாமார்,
அண்ணிமார், அக்காமார்,
அத்தான்மார், மருமக்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

நீர்வேலி தெற்கு

(38172)

# யாழ்ப்பாணத்தை பிடிக்க முயல்வது
# தமிழரை ஒழிக்கும் கொடூர முயற்சி

## தொண்டமான் கண்டனம்

கொழும்பு, ஓக. 23

யுத்தத்தில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது என்பது முடியாத காரியம். அப்படியில்லை வெல்ல முடியும் என்று கங்கணம் கட்டிச் செயற்பட்டால் அப்பகுதியை மக்கள் நடமாட்டம் எதுவுமற்ற ஒரு சுடுகாடாகவே கைப்பற்ற முடியும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான்.

கொழும்பில் இருந்து வெளிவரும் அரச சார்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யுத்தத்தில் புலிகளைத் தோற்கடித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் முயற்சியானது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற எடுக்கும் நடவடிக்கையாக அமையாது.

அது, தமிழ் மக்களை அழித்தொழிக்க மேற்கொள்ளும் கொடூர முயற்சியாகவே அமையும்.

மக்களில் இருந்து புலிகளைத் தனிமைப் படுத்தி யுத்தம் புரிவது என்பது இலகுவான காரியமல்ல.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக, அவர்களது உரிமைகளுக்காகப் போராடி வரும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முயல்வதே சரியான அணுகுமுறையாகும்.

யுத்தத்தின் மூலம் புலிகளை வெல்வது என்பது நடைமுறைச் சாத்தியமற்ற விடயம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். [ஐ]

## ஆற்றில் சடலங்கள்; மர்மம் துலங்கும்

### பொலீஸ் மாஅதிபர் கூறுகிறார்

அண்மையில் தென்னிலங்கையில் ஆறுகளில் மிதந்த சடலங்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட குழு ஒன்றே பொறுப்பு என பொலீஸ் மா அதிபர் ராஜகுரு தெரிவித்துள்ளார்.

இரகசியப் பொலீஸாரினாலும், சடலங்கள் மிதந்த பகுதி பிரதேசப் பொலீஸாரினாலும் சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி ஆட்கள் கொலை செய்யப்பட்ட பின்னரே ஆறுகளில் போடப்பட்டுள்ளனர்

இவர்களுடைய சடலங்களை கடத்திவரும் வாகனங்களை தேடும் முயற்சி தீவிரப்படுத் நப்பட்டுள்ளது.

கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் தொடர்பான ரகசியங்கள் வெகு விரைவில் வெளியாகும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (எ-10)

## அஞ்சலி கூட்டம்

நவாலி, ஓக. 23

நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயம் மீது கடந்த மாதம் 9 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சில் உயிர் நீத்தவர்களுக்கு ஆத்மசாந்தி வேண்டி நவாலி முருகானந்தா சனசமூக நிலைய முன்றலில் நாளை 24 ஆம் திகதி மாலை 4 மணிக்கு அஞ்சலிக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது. [எ-100]

## படையினரின் கடையில் வாங்கும் பற்றறிக்கு அனுமதி

வடபகுதிப் பயணிகளால் எடுத்து வரப்படும் ரோச் பற்றறிகள் (பெரியது) கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து பறிமுதல் செய்யப்படுகின்றன,

ஆனால் தாண்டிக்குளத்தில் இரு சோடி பற்றறிகளை வடக்கே எடுத்துவர படையினர் அனுமதிக்கின்றனர்.

தாண்டிக்குளத்தில் படையினரின் சோதனை முகாம் அமைந்துள்ள பகுதியில் உள்ள கடையில் வாங்கப்படும் பற்றறிகளுக்கே அனுமதி கிடைக்கின்றது என்று கூறப்படுகிறது. [இ-155]

## பொதுசன அமைப்புகளுக்கு

யாழ்ப்பாணம், ஓக. 23

இதுவரை தம்மை பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளாத சனசமூக நலனோம்பு முன்வை நிலையங்கள், ஊரக மேம்பாட்டு பங்கேற்பு அவைகள், ஊரக மகளிர் மேம்பாட்டு பங்கேற்பு அவைகள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் தமது பதிவுக்குரிய விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் செப்ரம்பர் முதலாம் திகதி முதல் தமிழீழ நிர்வாக சேவை உள்ளூராட்சிப் பகுதியில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும்—

ஏற்கனவே விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அவற்றைத் திரும்ப ஒப்படைக்காதவர்கள் அவற்றை ஒப்படைக்கும்படியும் தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அத்துடன் கடந்த மே 17 ஆம் திகதி வரை விண்ணப்பித்து இதுவரை தமது பதிவுச் சான்றிதழ்களை பெறத் தவறியோரும் தம்மை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்கள் அறிவித்துள்ளனர். (எ)

## பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஓக 23

யாழ். பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் அரச இயந்திர சாதன மரவேலைப் பயிற்சிப் பாடசாலைக்கு பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

14 - 30 வயதுக்கிடைப்பட்ட 8 ஆம் வகுப்பு சித்தியடைந்த இருபாலாரும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி, சுயமாக தயாரித்த விண்ணப்பத்தை இம் மாதம் 31 ஆம் திகதி வரை பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும் என, யாழ். பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (எ)

## யாழ். இந்து லியோ உதவி

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி லியோ கழகம் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான பால்மா, பிஸ்கட், படுக்கைவிரிப்புகள், உடுபுடைவைகளை சேகரித்து வழங்கி உள்ளது. (இ)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ். பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்களுக்குமான முக்கிய பொதுக் கூட்டம் ஒன்று இன்று நண்பகல் 12 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளதாக, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் அறிவிக்கின்றனர். (எ)


★ மக்களின் பணியில்

# 2 ஆண்டுகள் நிறைவு

**23-08-1995**

**சேரன் பல்பொருள் வாணிபம்**

நெல்லியடி.

**சேரன் மருந்து வாணிபம்**

யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளருக்கு எங்கள் நன்றியைத் தெரிவிப்பதுடன்
தொடர்ந்தும் உங்கள் ஆதரவை வேண்டுகின்றோம்.

உங்களின் திருப்தி
எங்களின் மகிழ்ச்சி

(சி/2097)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

40 நாட்கள் நிரம்பிய நல்ல இன அல்ஷேசன் நாய்க்குட்டிகளும், 1½ வயது நிரம்பிய அல்ஷேசன் பெண் நாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு 15/2 ஒடைலேன் (ராதா ஒழுங்கை) வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (38072)

### மலிவு விற்பனை

சமய நூல்கள், பக்தி இலக்கியங்கள், இலங்கை - இந்திய சஞ்சிகைகள், நாவல்கள் பாடசாலை உபகரணங்கள் யாவும் விற்பனையாகின்றன. ஸ்ரீ காந்த் புத்தகசாலை, நல்லூர். [38145]

மணித்தாராக் குஞ்சுகள், மயில் குஞ்சுகள், பொலிஸ், பிரேஸில், பண்டம், முட்டையிடும் கோழிகள், மூன்று தட்டுகளுடன் 12 அறைகள் கொண்ட கோழிக் கூட்டுடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. யோ. மாறன், மடத்தடி (தூபி அருகில்), சங்கத்தானை, சாவகச்சேரி. (8650)

### இனாம்

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் நடத்தப்படும் நல்லூர் கண்காட்சி சாலையிலுள்ள அண்ணா தொழிலக விற்பனை நிலையத்தில் எமது உற்பத்திப் பொருள்களை 100/- ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்து ஒரு அழகிய முருகன் படத்தை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். அண்ணா தொழிலகம், இணுவில். [சி-2071]

### சீயாக்காய்ப் பவுடர்

என்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்ற நிலையை உணர்ந்து அதனைப் பேணிக் காக்கும் முகமாக சித்த மருத்துவ நிபுணர்கள் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்டது ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர். சீயாக்காயுடன் மூலிகைகளும் சேர்த்து தயாரிக்கப்பட்ட பவுடரை வாங்கி பாவித்து பலனைப் பெறுவீர்களாக. (சி-1727)

### ஆனந்தம் சீயாக்காய்

சுதேச வைத்திய சங்க தலைவர் வைத்திய கலாநிதி S. சபாநாதன் அவர்களின் சிபார்சுப்படி சிரசு, உடல், தனித்துவத்தை பேணுமுகமாக தயாரிக்கப்பெற்றது ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர். தொடர்ந்து பாவிப்பதன் மூலம் சிரசு, உடலில் சித்த மருத்துவ மூலிகைகள் ஏற்படுத்தும் உற்று சக்தியை உணர முடியும். இன்றே பாவிக்க ஆரம்பியுங்கள் ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர். (சி-1723)

### ஆண்டு 9 கணக்கியல்

கனிஷ்ட தொழில் நுட்பச் சான்றிதழ் பரீட்சைக்கான கணக்கியல் பயிற்சிப் புத்தகம் எல்லா புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. G.C.E. (O/L) மாணவர்களுக்கான வர்த்தகம் வினாவிடைத் தொகுப்பு புத்தகமும் மீண்டும் வெளிவந்துவிட்டது. ஆக்கம் த. தர்மராஜன். [38100]

### தேவை

வெற்று ஜாம் (Jam) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹோர்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்கோ லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-1967)

### விநாயக திருமண சேவை

குற்றமுள்ள உயரமான டாக்டருக்கு டாக்டர் மணப்பெண்ணும், குற்றமுள்ள சுகாதார பரிசோதகருக்கும் (வயது 28), சைவ பட்டதாரிக்கும் மணப்பெண்கள் தேவை. எம்மிடம் [பட்டதாரிகளுடன்] வெளிநாட்டு ஜாதகங்களும் உண்டு. விவரங்களுக்கு நேரில்/கடிதமூலம். சுவாமி இராசகுலசிங்கம். இல 53/5, ஆனைசத்திர ஒழுங்கை, கற்தர்மடம். (38154)

### யாழ் கோட்டை

யாழ்ப்பாணக் கோட்டையின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் விளக்கும் வரலாற்று ஆவணம், களம் பல கண்ட யாழ் கோட்டை, அறிமுக விலை ரூபா 60/-. நல்லூர் ஆலய வீதியில் உள்ள பூபாலசிங்கம், ஸ்ரீகாந், தமிழ்த் தாய் புத்தகசாலைகள். (37995)

### திருமண சேவை

31 வயது, பரணி, செவ்வாயற்ற கணக்காளருக்கு படித்த மணமகள் தேவை. எம்மிடம் பல தர ஆண், பெண் குறிப்புகள் உண்டு. புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, மல்லாகம். இல 178, நாவலர் வீதி. பிறவுண் றோட் சந்தி (வேளாண்மைக்கு முன்பு), யாழ்ப்பாணம். [38151]

## செல்வச் சந்நிதி உற்சவம் நடைபெறாது

யாழ்ப்பாணம், ஒக. 23

தற்போதைய சூழ்நிலையின் காரணமாக, தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் இம் முறை நடைபெறமாட்டாது.

இம் மாதம் 26 ஆம் திகதி ஆலய உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருந்தது. (எ-155)

## இனாம்! இனாம்!!

## அண்ணா தொழிலக விற்பனை நிலையத்தில்

நல்லூரில் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தினால் நடத்தப்படும் கண் காட்சிச்சாலையில் தேர்த் திருவிழா அன்று ரூபா 100/- கொடுத்து

- ★ 1 பை இலகு தோசை மா
- ★ 1 பை இலகு அப்பம் மா
- ★ 100gr அண்ணா கோப்பி

என்பனவற்றை வாங்கி ஒரு கொப்பி, ஒரு முருகன் படம், அர்ச்சனை மாலையை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

(சி-2095) — அண்ணா தொழிலகம்.

## யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம்

வட்டுக்கோட்டை

புதிய கல்வியாண்டுக்கான கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்தோருக்கான நேர்முகப் பரீட்சை வட்டுக்கோட்டையில் உள்ள எமது நிறுவன வளாகத்தில் இம் மாதம் 29 ஆம் 30 ஆம் திகதிகளில் தினமும் மு. ப 9.00 மணி தொடக்கம் பி. ப 3 30 மணிவரை நடைபெறும்.

விண்ணப்பித்திருந்தும் எமது அறிவித்தல் கிடைக்கப் பெறாதவர்களும் சமுகமளிக்கலாம்.

— இயக்குநர்.

(சி-1985)

## முக்கிய அறிவித்தல்

தென்னிந்திய திருச்சபை
யாழ்ப்பாண ஆதீனம்

அளவெட்டி, சண்டிலிப்பாய்
திருச்சபைகள்

தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக அளவெட்டி, சண்டிலிப்பாய் திருச்சபைகளின் ஞாயிறு ஆராதனைகள் தற்காலிகமாக 27-08-1995 ஞாயிறு தொடக்கம் காலை 8-30மணிக்கு இலக்கம் 129, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர் கிழக்கு, அரியாலை என்னும் முகவரியில் உள்ள இல்லத்தில் நடைபெறும்.

27 - 08 - 1995: தூயநற்கருணை வழிபாடு

நடத்துபவர்;


பேரருள் திரு. அறிவர் எஸ். ஜெபநேசன்
(யாழ். ஆயர் தென்னிந்திய திருச்சபை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சபைக் குரு
ஏ. எஸ். ரி, ஆனந்தன்

(38165)

# 45-ம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



அமரர்
**இராசரெத்தினம் ஆனந்தராசா**
(பிரதேசசபை - ஊர்காவற்றுறை)
தோற்றம்: 14 — 12 — 1960



அமரர்
**தம்பிப்பிள்ளை தியாகராசா**
தோற்றம்: 17 — 03 — 1936

மறைவு: 10 - 07 - 1995



செல்வி
**பிருந்தா தியாகராசா**
(புலிகளின் குரல் பணியாளர்)
தோற்றம்: 10 — 03 — 1971
மறைவு: 22 - 07 - 1995

10 — 07 — 1995 அன்று ஸ்ரீலங்கா இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலால் எம்மை விட்டுப் பிரிந்த எங்கள் அன்புக்குரியவர்கள்

**திரு. த. தியாகராசா, திரு. இ. ஆனந்தராசா**

ஆகியோரினதும் அதே தினம் படுகாயமடைந்து 22 — 07 — 1995 அன்று எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்த

**செல்வி பிருந்தா தியாகராசாவினதும்**

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

இவர்களின் மறைவையொட்டி எமது துன்பத்தில் பங்கு கொண்டு அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், பலவிதத்திலும் உதவி ஒத்தாசை புரிந்து, பலவித பங்களிப்பை வழங்கிய புலிகளின் குரல், தமிழீழ வானொலி, நிதர்சனம் போராளிகளுக்கும், பணியாளர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செல்வி பிருந்தா தியாகராசா காயமடைந்து வைத்தியசாலையில் இருந்த போது சகல விதத்திலும் உதவி புரிந்த போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
**குடும்பத்தவர்கள்.**

''மிதிலை''
கப்டன் வினோத் வீதி,
ஆனைக்கோட்டை.

வைரவர் கோவிலடி,
நாரந்தனை கிழக்கு,
ஊர்காவற்றுறை.

[38044]

10 – 07 – 1995 அன்று அகால மரணமடைந்த
இணுவில் தெற்கு இணுவிலைச் சேர்ந்த

## அமரர் தேவநாயகம் குடும்பத்தினரின்
# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



**தேவநாயகம்** — தோற்றம்: 03 – 05 – 1948
**தனபாலசரஸ்வதி** — தோற்றம்: 22 – 10 – 1950

| பிள்ளைகள் | தோற்றம்: |
|---|---|
| சலஜா | 10 – 08 – 1982 |
| லாவண்யன் | 28 – 05 – 1984 |
| மனோரதிகா | 29 – 10 – 1986 |


**மறைவு: 10 - 07 - 1995**

*ஆறாத்துயரில் அல்லலுற வைத்துவிட்டு*
*மீளாத்துயில் கொண்டீரே குடும்பமதாய்*
*மாறாது துயரம்மா! மாசற்ற செல்வங்களே!*
*அரக்கர் விமானத்தின் உருக்கும் குண்டுகளால்*
*அரைக் கணத்தில் எம்மை அடியோடு மறந்தீரோ*
*பாசக் குஞ்சுகளே — உங்கள் ஆசை முகங்களை*
*பார்ப்பதுதான் எப்போ பாரினிலே.?*

திரு. திருமதி ஐயாத்துரையும், உறவினர்களும்.
*உடுவில் வீதி, மானிப்பாய்.* (38149)

---

# 45-ம் நாள் நினைவஞ்சலி



## அமரர் க. நாராயணசிங்கம்
(உரிமையாளர், ஸ்ருடியோ நித்யசித்ரா-சங்கானை)

*மலர்வு:* 13–04–1945 *உதிர்வு:* 10–07–1995

பசைமுகம் பார்த்தும் பண்பொடு பேசும்
நகை முகத்தன்பர் நாராயணசிங்கம்
தகை மிகு தலைவன் தம்மவர் தம்மை
திகைத்தழவிட்டுத் திடுமெனச் சென்றார்
வாளது நெஞ்சில் பாய்ந்தது போலும்
நாளதில் நாங்கள் வருந்திய அந்த
வேளையில் வந்து வேண்டிய உதவ
ஆமென நின்ற அனைவர்க்கும் நன்றி.
அன்னவர் ஆன்மா ஆறுதல் வேண்டும்
தினமென அமைந்த திதி நாளிதனில்
இனசனம் அன்பர் அனைவரும் வருவீர்
மனைவி மக்களின் மடலிது ஏற்பீர்.

தகவல்;
மனைவி, மக்கள்,
(8702)

---

# நீங்காத நினைவலைகள்

## 4 ஆம் ஆண்டு



*அமரர்*
**சண்முகம் கனகரத்தினம்**
(முன்னை நாள் முதன்மை ஆசிரியர்,
கொல்லங்கலட்டி சைவத் தமிழ் கலவன்
பாடசாலை)

*தோற்றம்:* 28 – 10 – 1935
*மறைவு:* 28 – 10 – 1990

## 1 ஆம் ஆண்டு



*திருமதி*
**சங்கேஸ்வரி கனகரத்தினம்**

*மலர்வு:* 24 – 03 – 1940
*உதிர்வு:* 04 – 09 – 1994

"வேண்டித்தவம் புரிந்து எங்களைப் பெற்றெடுத்துக் கண்ணை இமை காப்பது போல் நல்அன்போடு எம்மை வளர்த்தெடுத்தீர் நாங்கள் வளர்ந்து நன்னிலையில் இருப்பதனைக் காண்பதற்கு முன் நீங்கள் ஏன் கண்களை மூடிவிட்டீர்? தாங்க முடியாமல் தவித்துப் புலம்புகின்றோம். மீண்டும் உங்களைப் பார்ப்போமா? உங்கள் நினைவுகளை மறப்போமா? உங்களைத் தினமும் எங்கள் இதயக் கோவிலில் பூஜிக்கும்;

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.


மகன் க. ராஜாஜி,
மகள் க சிவகுமாரி

[38159]

---

# 45-ம் நாள் நினைவஞ்சலி

*மலர்வு:* 17 — 10 — 1957



*அகால மரணம்:* 10 — 07 — 1995


## அமரர் நடராசா இராஜபாலன்
(வர்ணம் தீட்டுநர்)

என தன்புத் தெய்வமே அளவிலா அன்பூட்டி
அன்னையாய் அரவணைத்து தந்தையாய்க் -
காப்பாற்றி
குறும்புகள் பல கூறி குடல் குலுங்க வைத்தவரே
எல்லாமே நீயாய் ஏற்ற என் துணையே
ஒன்றரை ஆண்டினிலே ஒற்றையாய் இருந்திவிட்டு
சிக்கனமாய் வழிகாட்டி சீக்கிரம் எனை
தனி மரமாகத் தனியாக விட்டீர்களோ
உங்களை இழந்த உள்ளம் இங்கு உள்ளக் -
குமுறலால்
கண்களும் மூடாது கண்ணீரும் ஓயாது உங்கள்
இதயத்தில் என்றுமே வாழ்ந்திடும
அன்பு மனையாள் உங்கள் ஆத்மா இறைவன்
திருவடியில் அமைதி பெற வேண்டுகிறேன்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மாமி, மைத்துனர்மார்,
மைத்துனிமார், பெறாமக்கள்,
உற்றார், உறவினர்.

தகவல்:
மனைவி திருமதி மல்லிகாராணி இராஜபாலன்
மல்லாகம் றோட்,
சங்கானை. [38111]

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் க. பத்மநாதன்

தோற்றம்: 30 - 05 - 1932
மறைவு: 03 - 09 - 1994

திதி:- 23 - 08 - 1995

சப்பறத் திருநாளில் சடுதி மரணம் வந்ததையா
முப்புரம் எரித்த சிவன் சீர் மகனாம் முருகனடி
எப்படியோ பற்றி விட்டீர் எங்களுக்கு ஏக்கம்-
தான் மிச்சமையா.

கப்பல் கவிழ்ந்து நாங்கள் கண்ணீர் பூக்கள்-
சொரிகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்.

கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி.

[38163]

# 45-ம் நாள் நினைவஞ்சலி



## வைத்திலிங்கம் ஜெயசிங்கம்

(உடுவில் கல்விக்கோட்ட திட்டமிடல் உதவியாளர்)

மலர்வு: 01 - 02 - 1939
உதிர்வு: 10 - 07 - 1995

''கனி என்று செல்லமாய் கணவரும் சோதரரும்
கனிவாய் அழைத்திடச் சிரித்தவள் கமலாதேவி
கருகியே வெந்திடக் கண்டு துடிக்கையில்
அருகிலே மைத்துனி சாவித்திரி
''ஐயோ'' என்றலறிய அண்ணா ஜெயசிங்கம்
அதிர்ச்சியிலிருந்து மீளுமுன்னே
அடுத்தநாள் வீசிய அரக்கரின் குண்டு
அவரையும் பலி கொண்ட துயரம்
ஆறாது கண்ணின் நீராக ஓட
மாறாத துயருடன் அஞ்சலிகள் சமர்ப்பணம்.

தகவல்
— குடும்பத்தினர்

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(8704)

## நல்லூர் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓ. 23

நல்லூர் கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் 23 ஆம் நாள் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணி மண்டப முன்றலில் —

மாலை 6மணி முதல் 7 மணி மணிவரை சாரதா - சச்சிதானந்தன் - பாட்டு

7 மணி முதல் 8-30 மணி வரை திரு. வி. எம். பஞ்சாபிசேகன் குழுவினரின் நாதஸ்வர இசை காலை 8-30 — 12 மணிவரை.

★ நல்லை ஆதீன கலா மண்டபத்தில் —

திருமுறை வழிபாடும், பயிற்சி நெறி வகுப்புகளும் — பண்டிதர் மு. கந்தையா ''திருத்தொண்டர் மகிமை''

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் [தலைவர் இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்] — ''கோயில் பண்பாடு''

★ நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் பி. ப. 3-00 மணிக்கு சைவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப் பேருரை — ''திருமந்திரம்''

★ மேற்கு வீதியில் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் —

மாலை 5 - 30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் ''விஷ்ணு பாகவதம்'' தொடர் இசைப் பேருரை.

[எ-30-111]

## பாதுகாப்பு சேவையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓ. 23

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் பொது நிறுவனங்களைச் சேர்ந்த பாதுகாவலர் சேவைகளை இயக்குபவர்களுக்கும், ஊழியர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளதாகவும்—

இவர்களை இன்று முதல் நாளை மறுதினம் வரை அலுவலக நேரத்தில் பதிவு செய்து கொள்ளும்படியும்—

பதிவுப் படிவங்களை கோண்டாவில் உள்ள அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அறிவிக்கின்றனர். (எ)

## கீரிமலை நகுலேஸ்வர ம.வி மாணவர்களுக்கு

கீரிமலை நகுலேஸ்வர ம.வி ஆண்டு 11 பொதுக் கல்வித் தேர்வு மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று நண்பகல் 12 மணிக்கு, கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று பாடசாலை அதிபர் அறிவிக்கின்றார். (எ)

அழகிய வேலைப்பாடுடன் கூடிய 40 அடி நீள மணப்பந்தல், கதிரைகளுக்கும் மற்றும் வர்ண புகைப்படம் வீடியோ பிடித்திடவும்.

**ராஜன் வீடியோ**
மூவிஸ் சென்ரர்

தொடர்புக்கு:
**ராஜன் சைக்கிள் வேர்க்ஸ்**
பருத்தித்துறை.

(சி/2090)

# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

குட்டியப்புல மண்ணில்: 27-07-1970
சண்டிலிப்பாய் மண்ணில்: 14-07-1995

## கப்டன் துரை

[வேலன் - துரைராசா]
குட்டியப்புலம் - வயாவிளான்

துள்ளித்திரியும் வயதிலே துடுக்கடங்கி
பள்ளிப்படிப்பைத்தான் மறந்து தானைத்தலைவர் -
வழிநின்று
தயங்காமல் போர் செய்தாய்
முன்னேறிப் பாய்தலுக்கு முதுகெலும்பாய் நின்று
எதிரி முதுகெலும்மை முறித்தனையோ
நேசித்த தலைவரையும் தரிசித்த மண்ணையும்
தழுவி உயிரைக் கொடுத்தாயோ
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இவருடன் வீரச்சாவைச் தழுவிக் கொண்ட ஏனைய போராளிகளுக்கும் எங்கள் வீர அஞ்சலிகள் சமர்ப்பணம்.

இவரின் அந்தியேட்டி அழைப்பில் கலந்து கொள்ளும்படி சகபோராளிகளையும் உற்றார், உறவினரையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

கந்தசாமி கோயிலடி,
நீர்வேலி.

(38164)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

(23 - 08 - 1995)

தரணியில் தோற்றம்: 25 — 12 — 1963



சாவுடன் சங்கமம்: 10 — 07 — 1995

## நடராசா கணநாதன் (சபா)

''நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்து இவ் உலகு''

பொருள்:

நேற்று வாழ்ந்திருந்த ஒருவன்
இன்றைக்கு இல்லாமல் போய் விட்டான்
என்று சொல்லும் பெருமை உடைத்து
இந்த உலக மாகும்.

(குறள் நிலையாமை)

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், போராளிகள், சக தொழிலாளர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

- குடும்பத்தினர்.

30/131, அத்தியடி குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

[38158]

**சாயி ஒளியருவி**
**சாயி வீடியோ**

சாயி போட்டோ சாயி மணப்பந்தல்

அச்சுவேலியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் தற்காலிகமாக ஆடியபாதம் வீதி கல்வியங்காடு எனும் முகவரியில் இயங்கி வருகிறது என்பதனை வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அன்புடன் அறியத் தருகிறோம்.

நிரந்தர முகவரி:
சாயி வீடியோ
பஸ் நிலையம்,
அச்சுவேலி.

தற்காலிக முகவரி:
ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு.

[38146]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பலவீனமாக்குவதன் பொருள் இதுவே!

யாழ்ப்பாணத்தின் மீது பாரிய இராணுவத் தாக்குதலை நடத்தி விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவது. அதன் பின்னர் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு மாறாக, தனக்கு விருப்பமான தீர்வு ஒன்றைத் திணிப்பது. இதுவே சந்திரிகா அரசின் தமிழர் பிரச்சினை சம்பந்தமான இன்றைய கொள்கை.

இந்த வகையில் பாரிய தாக்குதல் நடவடிக்கையாகத் திட்டமிடப்பட்டது தான் ''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கை.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பைப் பின்னடிப்பதுடன் சம்பந்தப்பட்ட அரசியல் நோக்கம் — லாபம் — கருதிய இந்த இராணுவ நடவடிக்கை அரசுக்குப் பெரும் தோல்வியில் முடிந்தது. நான்கு தினங்களில் சுமார் 300 அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றதும், பல கோடி ரூபா உடைமைச் சேதத்தை உண்டாக்கியதும் மூன்று லட்சம் தமிழ் மக்களை இடம்பெயரச் செய்ததுமே இத்தாக்குதலின் பெறுபேறு.

ஆனால் அந்த மாபெரும் தோல்வியை ஒப்புக் கொள்ள அரசுக்கு — இராணுவத்துக்கு — இன்னும் மனம் இசையவில்லை. கடந்த வாரத்தில் கூட, ''முன்னேறிப்பாய்தல்'' நடவடிக்கை மூலம் கைப்பற்றிய 78 சதுர கிலோ மீற்றர் பரப்பு தமது கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருப்பதாக இராணுவப் பேச்சாளர் சரத்முனசிங்கா பச்சைப் பொய் கூறினார்!

சிங்கள மக்களை ஏமாற்றுவதற்காக, குடாநாட்டில் அடிக்கடி மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு எப்போதும் வெற்றி தமது பக்கமே என்று காட்டும் உத்தியை ஸ்ரீலங்கா படைகளும் அரசும் இப்போது கைக்கொண்டுள்ளன.

நேற்று முன்தினம் சித்தன்கேணிவரை முன்னேறுவதற்கு நடத்தப்பட்ட இராணுவத் தாக்குதல் அந்த வகை சார்ந்ததே. சிறு பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகிறது என்பது போல, இராணுவத்தின் திங்கட்கிழமை நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ்ப் பொது மக்களே.

ஒரு சில மணி நேரத்தில் எறிகணை வீச்சுக்கு இலக்காகி 13 அப்பாவிப் பொது மக்கள் பலியாகினர். அவர்களில் பிஞ்சுக் குழந்தைகளும் அடங்குவர். இவர்களை எல்லாம் வழமை போலவே விடுதலைப் புலிகளாகக் கணக்குக்காட்டி பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிக்கை வெளியிட்டு, வெளிநாடுகளிலும் பிரசாரப்படுத்திவிட்டது.

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவது என்ற அரசின் சொற்றொடருக்கு, தமிழ் மக்களைக் கொன்றொழிப்பது, இடம்பெயர வைத்து அவலப்படச் செய்வது, உணவுத் தடை போன்ற அழுத்தங்களால் அவர்களைக் கொடுமைப்படுத்துவது என்றே பொருள்படும்.

ஸ்ரீலங்கா அரசின் பொய்களை நம்பி, அதற்கு ஆதரவளிக்கும் உலக நாடுகள் இந்த உண்மையை உணருவது எப்போது? கொழும்பில் உள்ள தங்கள் தூதுவர்களை ஒருமுறையாவது வடக்கே அனுப்பி உண்மையைத் தெரிந்து கொள்ள முயலக் கூடாதா?

## ஐ. நா. அதிகாரிகள் யாழ், விஜயம்

யாழ்ப்பாணம், ஓக. 23

ஐ. நா. அபிவிருத்தி திட்டம், ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் இரு அதிகாரிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

ஐ. நா. அபிவிருத்திதிட்ட மனிதாபிமான ஆலோசகர் றோஸன் ஹட்சன், ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு அதிகாரி பிரிட்டா ஒஸ்போக் ஆகியோரே இங்கு வருகின்றனர். (ஒ-3)

# இலங்கையர்களை சிறைவைக்கும் அதிகாரம் தமிழகத்துக்கு வேண்டும்!

## முதல்வர் ஜெயலலிதா ராவிடம் கோரிக்கை

சென்னை, ஓக. 23

வெளிநாட்டினர் தொடர்பான சட்டத்தின்படி இலங்கைப் பிரஜைகளை காவலில் வைப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்படவேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பிரதமர் பி வி. நரசிம்மராவை நேற்று புதுடில்லியில் சந்தித்து பேசிய போது இதற்கு மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

சமீபத்தில் வேலூர் மத்திய சிறையில் இருந்து தப்பிச் சென்ற விடுதலைப் புலிகள் சட்டப்படி அங்கு கைதிகளாக வைக்கப்படவில்லை என்றும் தமிழக அரசு விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலூர் சிறை ஒரு தனி வகையான அகதி முகாம் என்றும், அகதிகளாக தங்களைப் பதிவுசெய்து கொள்ளாத இலங்கைத் தமிழர்களும், சில வழக்குகளில் சம்பந்தப் பட்டவர்களும், விடுதலைப் புலிகள் உட்பட இலங்கையின் பல்வேறு அரசியல் குழுக்களின் அனுதாபிகளும் அங்கு தங்கவைக்கப் பட்டிருந்தார்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-4)

# தமிழரை தாக்கும் ராணுவம் மீது விசாரணை நடத்துக!

## தமிழ் எம்.பி. ஜனாதிபதிக்கு மகஜர்

கிழக்கில் தமிழர்களைத் தாக்கி இம்சைப்படுத்தும் இராணுவச் சிப்பாய்கள் மீது விசாரணை நடத்தி அவர்களைத் தண்டிக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பியான ஆர். துரைராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்கவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மட்டக்களப்பில் கடந்த வார இறுதியில் தமிழ் இளைஞர்கள் பலர் படையினரால் தாக்கப்பட்டுள்ளதை அடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் —

அச்சம்பவம் குறித்து விசாரணை ஒன்றை நடத்துமாறும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. [ஒ-6]

# மாத இறுதிக்குள் மற்றொரு இராணுவ நடவடிக்கையாம்

கொழும்பு. ஓக. 23

இம்மாத இறுதிக்குள் வட பகுதி மீது மற்றொரு இராணுவ நடவடிக்கை ஆரம்பமாக இருப்பதாக உயர் இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்நடவடிக்கை ''முன்னேறிப் பாய்தல் - 2'' ஆக இருக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைக்கு முன் ஏற்பாடாக வட பகுதிக்கு பெரும் எண்ணிக்கையான துருப்புக்கள் நகர்த்தப் பட்டுள்ளதாகவும் —

போருக்கான சகல ஆயுத தளபாடங்களும் வெளிநாடுகளில் இருந்து வந்து சேர்ந்து விட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. [ஒ]

# உரிய சுகாதார முறைகளைப் பேணி தொற்று நோய்களைத் தவிருங்கள்!

## தமிழீழ சுகாதார சேவையினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 23

சுகாதார முறைகளை உரிய விதத்தில் பேணி தொற்று நோய்களைத் தவிர்க்கும்படி தமிழீழ சுகாதார சேவைகள் பணியகம் விடுத்த செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

பொதுமக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் இடங்களில் தொற்று நோய்கள் பரவுதல் எளிதில் சாத்தியமாகின்றது. மக்கள் தனிநபர் சுகாதாரம் நன்கு பேணாததும், தொற்றுள்ள நீரைப் பருகுவதும், தொற்று ஏற்பட்ட உணவுப் பண்டங்களை உண்பதும், குடல் சார்ந்த தொற்று நோய்கள் பரவுவதற்குக் காரணிகளாகின்றன. அவையாவன வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல், வயிற்றுளைவு, செங்கண்மாரி, வட்டப்புழு ஆகியன.

எனவே, பலரின் பாவனைக்கு விடப்படும் கிணறுகள், நீர்த்தேக்கங்களுக்கு ஏற்றவாறு இருநாள்களுக்கு ஒரு தடவை குளோரின் இடப்படல் முக்கியமானதாகும். அத்துடன் குளிர்களி, மென்பானம், சர்பத் தயாரிப்புக்களுக்கு நோய்க்கிருமிகள் அற்ற சுத்தமான நீரைப் பாவிப்பதும், உணவு பரிமாறும் பாத்திரங்கள் நன்றாகக் கழுவுவதோடு நாளாந்தம் ஓய்வு நேரத்தில் சவர்க்காரம் ''விம்'' போன்றவை இட்டுக் கழுவப்படல் வேண்டும்.

அத்துடன் சமைத்த உணவை, அப்பவகை, இனிப்புப் பண்டங்களை, சர்பத்தை இனிப்புப்பானத்தை, பழவகைகளை மற்றும் வெட்டப்பட்ட அல்லது உரிக்கப்பட்ட வேறுவகையான பழத்தைத் தூசினால் அல்லது நோய் பரப்பும் ஈக்களினால் அதன் உள்ளீடுகள் அசுத்தமாவதைத் தடுக்கும் வகையில் நிரந்தரமான பொருள்களினால் அமைக்கப்பட்ட பெட்டியில் அல்லது கொள்கலத்தில் வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறான பாதுகாப்பு, பெட்டிகள் அல்லது கொள்கலங்களில் பொருள்கள் எடுக்கும்போது அல்லது இடும்போதன்றித் திறந்து வைத்திருக்கலாகாது.

வாங்கியதும் வாயில் போடும் வகையிலான கடலை சோளம், பருப்பு, இனிப்பு, தயாரிப்புகள் அனைத்தும் குறைந்தபட்சம் 'பொலித்தீன்' கடதாசியினால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

இத்தகைய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி எமது பகுதியில் தொற்று நோய்களின் பரவலைக் கட்டுப்படுத்த ஒத்துழைக்க வேண்டும்.

இப்படி செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திங்கள் என்று....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சவாலை என்ற பொருளில் இந் நடவடிக்கைக்கு ''ஈரகன் பயர்'' எனப் பெயரிட்டிருந்தது.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் 15 சிப்பாய்கள் காயமடைந்தாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

இந்நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பை அரசப் படைகள் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டதாக அவ்வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன. (உ)

## வடக்கில் உணவுப்.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டன் கப்பல்களில் வடக்கிற்கு பொருள்களை ஏற்றிச் செல்லும் பணி கடந்த இரு மாதங்களாகத் தடைப்பட்டிருப்பது தெரிந்ததே.

வவுனியா ஊடாக லொறிகளில் பொருள்களை எடுத்து வருவதையும் படையினர் தடை செய்துள்ளனர்.

இதனால் குடாநாட்டில் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

இதுகுறித்து ஜனாதிபதிக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ள யாழ். அரச அதிபர் —

யாழ். மாவட்டத்திலுள்ள இரண்டரை லட்சத்திற்கு அதிகமான அகதிகளுக்கு கடந்த இரு மாதங்களாக பங்கீட்டு உணவுப் பொருள்கள் மற்றும் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் பெரிய அளவிலான உணவுத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உடனடியாக அங்கு உணவுப் பொருள்களை அனுப்பி வைக்குமாறும் அரச அதிபர் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார்.

யாழ். குடாநாட்டில் பட்டினி நிலையை ஏற்படுத்த ஸ்ரீலங்கா அரசு எடுத்து வரும் முயற்சி, கொழும்பில் தங்கி நிற்கும் அரச அதிபரின் நடவடிக்கைகளால் பகிரங்கப்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் குறிப்பிடடன.

[உ-3-6]

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### ஆற்றோம் அறுமுகவா?

கூற்றாய்வரு பகைவர்விலக் இடுவாய்
கொடுமையவர்க் கெதுசெய்தது மறியோம்
ஏற்றாயெமை அடியாரென என்றோ
இனியாது செய்வதுநல் லூரா!
தோற்றாதமிழ் போகும்வலி துணையாய்
தொடுவாய்வடி வேலைவிடு துணிவாய்;
ஆற்றோமறு முகவா, வா, மயில்மேல்
அசுரர்படை அழித்தேயெமைக் காப்பாய்!

— முருகனடியான்

### காப்பது உன் கடமையன்றோ!

ஓங்கார மெய்ப்பொரு ளாய்நின் றிடுங்குமரா
நீங்கா தென்று மெமக் கின்னருளை தாராய்
ஓங்கி யுலகளந்த மாயனவன் மருகா
பாங்காக வந்தெமைப் பார்த்த ருளுவாயே
தாங்காத் துயரினில் தவித்திடு மெம்மை
தாங்கி யருள்செ ய்யஓடி வருவாயே
தூங்கா தென்று முனை தொழும டியோமை
காப்பதுன்கடமையன்றோ நல்லூரிற் கந்தா.

— சோ. க. வேலாயுதர்

நாளை பார்ப்போம் என இருந்துவிடாதீர்கள்
இன்றே வாருங்கள் நல்லூர் பொருண்மியக் கண்காட்சிக்கு

# 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



## செல்வி தம்பிநாயகம் விமலா

(Accounts Clerk, Mc Leod, Hospital, Inuvil)

தோற்றம்! 25 — 09 — 1957
மறைவு! 24 — 07 — 1995

''கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது''

09 - 07 - 95 அன்று நவாலியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் எமது அன்புக்குரிய விமலா படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் உதவிய வைத்தியர்களுக்கும், ஊழியர்களுக்கும் மற்றும் பல்வேறுவழிகளில் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவிப்பதுடன் இவரது மரணச்சடங்கின்போது பல்வேறு வகையிலும் அனுதாபங்களை தெரிவித்து, ஆறுதல் கூறி உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

– குடும்பத்தினர்.

சென்பீற்றேஸ் வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய். (8701)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகம்மா கந்தப்பு

சாமியன் அரசடி, கரவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி கனகம்மா கந்தப்பு 22-08-1995 ஆம் திகதி சிவபதமடைந்து விட்டார்.

இவர் திரு. சி. கந்தப்புவின் (ஓய்வூதியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலநந்தினி, பாலேந்திரன், சாந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், திரு. க. இராமச்சந்திரா (சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், கரவெட்டி பிரதேச செயலகம்), திரு. ஆ. சிவசுவாமி (பிரதேச செயலர், பருத்தித்துறை) ஆகியோரின் மாமியாரும், பாகினி, ஷர்மி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22-08-1995ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கரவெட்டி சோனப்பு மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
ஆ. சிவசுவாமி
(மருமகன்)

''நந்தனம்''
சாமியன் அரசடி,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி. [8703]

## திருமதி நாகம்மா சுப்பிரமணியம்

சாவகச்சேரி கோவில் குடியிருப்பைச் சேர்ந்த திருமதி நாகம்மா சுப்பிரமணியம் நேற்றுச் சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (முன்னாள் P.W.D. ஓவசியர் - மாத்தளை] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரவணமுத்து [அட்வகேட்] அவர்களின் சகோதரியும், திருமதி அருந்ததி சிவபாதசுந்தரம் (லண்டன்], சரவணமுத்து (கனடா], திருமதி சகுந்தலா ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று (23-8-95] புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
S. சகுந்தலா
[மகள்]

[38175]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# புதிதாக வாடகைக்கு அமர்த்திய "பாஜ்" பாவனைக்கு உதவாதது

## அதிகாரிகளால் திருமலையில் தடுத்து வைப்பு

கொழும்பு, ஓக 23

வடபகுதிக்கு பொருள்களையும் ஆட்களையும் ஏற்றி இறக்குவதற்காக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் புதிதாக வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'பாஜ்' பாவனைக்கு உகந்தது அல்ல என்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

இந்த 'பாஜ்'ஜின் உள்பகுதியில் துவாரங்கள் இருப்பதே இதற்குக் காரணம்.

இதனை சேவைக்கு விட முடியாது என்று கப்பல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே பாவனையில் இருந்த'' எம்விதாரா'' என்ற ''பாஜ்'' ஜுக்குப் பதிலாகவே புதிய ''பாஜ்'' வாடகைக்கு அமர்த்தப்படிருந்தது.

''எம்விதாரா''வும் உள்பகுதியில் இருந்த துவாரம் காரணமாகவேநீரில் அமிழ்ந்து போனது.

''எம்விதாராவை'' வாடகைக்கு வழங்கிய கப்பல் கம்பெனியேபுதிய ''பாஜ்''ஐயும் வழங்கி இருந்தது.

இரண்டு வாரங்களுக்கு முன்னரே இந்த பாஜ் பம்பா மனைத் துறைமுகம் வந்திருந்து இருந்து திருகோணமலை தது. [இ]

## நாளை இயங்காது

யாழ்ப்பாணம், ஓக. 23

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழா உற்சவத்தை முன்னிட்டு தமிழீழ நிர்வாக சேவைச் செயலகம் நாளை வியாழக் கிழமை மூடப்பட்டிருக்கும் என தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

### மரண அறிவித்தல்

## ஆறுமுகம் சுந்தரலிங்கம்

(இளைப்பாறிய வெளிக்கள போதனாசிரியர், விவசாயத் திணைக்களம்)

காரைநகர் இடைப்பிட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் சுந்தரலிங்கம் காலமாகி விட்டார்.

அன்னார் அமரர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற நடராசா - செல்லம்மா தம்பதியினரின் மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், மனோன்மணி, சிவமணி, கணேசமூர்த்தி, தவமணி, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகசுந்தரம், சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பவானி, தயானி, குருபரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-08-1995) புதன் முற்பகல் 11-00 மணிக்கு 152, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
மனைவி, பிள்ளைகள்

முகவரி:
152, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (38176)

நாட்டியக் கலை நூல் விற்பனைக்கு

சுபாஷிணி பத்மநாதனால் எழுதப்பட்ட நாட்டியக் கலை நூல் விற்பனைக்குண்டு

விற்பனை விலை ரூபாய் 440/-

மொத்த விற்பனையாளருக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி!
No. 19, Gregory Place,
Dehiwala. (38148)

# 45-ம் நாள் நினைவஞ்சலி



| அன்னை மடியில்: | தமிழீழ மண்ணில்: |
|---|---|
| 02 | 14 |
| — | — |
| 03 | 07 |
| — | — |
| 1971 | 1995 |

## பழனித்தம்பி யோகராசா
லெப். நிசன்

தன் உடலை மண் காக்க தந்த – நிசனே
தன்னுயிரை மொழிக்காக ஈந்த மறவனே
பூமியிலே நீ வீழ்ந்தாய் மாவீரனே – விழுந்த
புழுதி கூட உன்னுடைய பரணி பாடுதே

இன்று 23 - 08 - 1995 லெப்டினன்ட் நிசன் இல்லத்தில் நடைபெற இருக்கும் அவரது வீட்டுக் கிருத்திய வைபவத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகல போராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்கள். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
சகோதரிகள்,
உற்றார், உறவினர்.

த. தம்பிராசா
புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (38169]

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை (சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி) காலமானார்.

இவர் இலட்சுமியின் அன்புக் கணவரும், கந்தசாமி [S K. சாமி], சிவம் (கணேஷ்), சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை நெல்லியடி, சுப்பிரமணியம் [இலண்டன்], புனிதவதி, திலகவதி, சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஜெயராணி, செல்வமகாலட்சுமி [பிரதேச சபை உடுப்பிட்டி], கந்தசாமி கணக்காளர் [Pan Asia Ltd ]. சிவஞானம், ரஞ்சநாதன் ஆகியோரின் மாமனும், வள்ளியம்மையின் சகோதரரும், ரட்ணபாலாவின் மைத்துனருமாவார்.

தகனக் கிரியை 22-08-95 அன்று பி. ப 4மணிக்கு நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

மக்கள்! சி. கந்தசாமி,
சி. சிவம்.

[38170]